1995 ஏப்ரல் 28]

சிறப்படைய வாய்ப்பு இருக்கிறது. நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டது போல் குறைந்தது அந்த தண்ணீர் வசதி, சாலை வசதியாவது மற்ற துறைகளிடம் குடிநீர் வழங்கல், பொதுப்பணித் துறை மூலம் உதவிகேட்டு அதை மட்டுமாவது அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைவிட நொடிந்த தொழிலில் இருப்பவர்களுக்கு எல்லாமே அரசு இதுவரை மானியம் கொடுக்கவில்லை. இது ஒரு புது முன்னோடியாக அவர்கள் உருவாக்கப் பார்க்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அன்பழகன், திருமதி க. பழனியம்மாள், திரு. இராமசுவாமி அவர்கள் எல்லாம் சொல்லுகின்றபோது இந்தியா முழுவதிலும் இருந்தும் பாடி கட்டுவதற்கு, மற்ற பணிகளுக்கு நாமக்கல்லுக்கு வண்டிகள் வருகின்ற நேரத்தில் அந்த சங்கத்தைச் சேர்ந்தவர்கள் உறுதியாக, வசதி படைத்தவர்கள் என்பது தெளிவாக தெரிகிறது. ஆக அப்படி வசதி படைத்தவர்கள் மானியம்கேட்பது நியாயம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *489*, திரு. ஆர். பி. பரமசிவம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

489—

பப்பாளி பயிரிட மாதிரித் தோட்டங்கள் அமைத்தல்

**35620*—திரு. ஆர். பி. பரமசிவம்:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோ. 6 பப்பாளியை தமிழக விவசாயிகளிடம் ஊக்குவிக்க மாதிரித் தோட்டங்கள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கோ. 6 பப்பாளி ரகத்தினை ஊரகப் பகுதிகளில் ஊட்டமிகு பழத் தோட்டங்கள் அமைக்கும் திட்டத்தில் விவசாயிகளுக்கு விநியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

[1995 ஏப்ரல் 28

முற்பகல் 10-25

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கோ.6 பப்பாளி என்பது வேளாண்மைப் பல்கலைக் கழகத்தால் கண்டுபிடிக்கப்பட்ட அதிக மகசூல் தருகின்ற ஹை--யீல்டு வெரைட்டி என்று சொல்லப்படுவது இந்தப் பப்பாளி வகையாகும். இந்தப் பப்பாளி காயிலிருந்து பப்பைன் என்ற ஒரு மருந்துப் பொருள் தயாரிக்கின்ற நிலை இருக்கிறது. அதனால் விவசாயிகளுக்கு அதிக லாபம் தருகின்ற, அதிக விலை கொடுத்து வாங்கப்படுகின்ற பப்பைன் என்ற அந்த ரா மெட்டீரியல் அதிக விலைக்கு விற்கப்படுவதால் விவசாயிகள் பொருளாதாரத்தில் மேம்பாடு அடைய அது வழி செய்கின்றது. ஆகவே, இந்தப் பப்பாளி வகையை, அதாவது கோ.6 பப்பாளி வகையை விவசாயிகள் தெரிந்து, அறிந்து, புரிந்துகொள்கிற வகையில், ஒன்றிய அளவில் ஒரு மாதிரி தோட்டத்தை அமைத்து அதன்மூலமாக இந்த வகையை விவசாயிகள் பயிரிட்டு பொருளாதாரத்தில் மேம்பாடு அடைய அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோ.6 பப்பாளி தமிழ்நாடு வேளாண் பல்கலைகழகத்தால் வெளியிடப்பட்ட ரகமாகும். இவை ஒரு ஹெக்டேருக்கு 120 முதல் 160 டன்கள் வரை வளங்கள் தரக்கூடியவை. இவைகளிலிருந்து பப்பைன் பவுடர் எடுக்கப்பட்டு இன்றைக்கு மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. இந்த ரகத்திற்கு அமோகமான வரவேற்பு இந்தியா முழுக்க இருந்து வந்துகொண்டிருக்கிறது. இருப்பினும் தேவையான விதைகளை வேளாண் பல்கலைக்கழகத்தில் இன்றைக்கு உருவாக்கி தந்துகொண்டிருக்கிறார்கள். அதே நேரத்திலே டிஷ்யூ கல்ச்சர் முறையிலே பல்வேறு நிறுவனங்கள் இந்தக் கன்றுகளை வழங்குகிறார்கள். எனவே, இதற்கு தனியாக ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் மாதிரி தோட்டங்கள் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதிரித் தோட்டம் அமைக்கவேண்டுமென்று நான் சொன்னதினுடைய நோக்கமே, விவசாயிகள் இதைப்பற்றி சரிவர புரிந்துகொள்ள முடியாத நிலை இருந்து வருகிறது. அதை எப்படிப் பயன்படுத்துவது; அதனால் ஏற்படுகின்ற வருமானத்தை அவர்களால்

1995 ஏப்ரல் 28]

தெரிந்துகொள்ள முடியவில்லை என்கிற காரணத்தினால் தான் சொன்னேன். படிப்பறிவு இல்லாத ஏழை விவசாயிகள்கூட இந்தச் சாதாரண வகையை மிக எளிதாக வளர்த்து அதன்மூலமாக பொருளாதாரத்தில் மேம்பாடு அடைய முடியும். அதன்காரணமாகத் தான் ஒரு மாதிரி தோட்டத்தை அமைக்க அரசு முன்வருமா எனக் கேட்டேன். அதேபோன்று, இந்தப் பப்பாளிக் காய் சமையலுக்கும் பயன்படுத்தப்படுகிறது. பழம் ரத்தத்தைச் சுத்தம் செய்யவும், ஜீரண சக்தியை அதிகப்படுத்தவும், வயிற்றுப்புண்ணை ஆற்றவும், இன்னும் சொல்லப்போனால், கர்ப்பிணிப் பெண்கள்கூட இதைப் பயன்படுத்தி பலன் அடைகிறார்கள். ஆகவே, இது மருந்துக்கு மட்டுமல்ல, எல்லா வகையிலும் ஏழை விவசாயிகளுக்கு, ஏழை மக்களுக்குப் பயன்படுகிறது. ஆகவே, இந்த வகையை ஏழை விவசாயிகள் புரிந்துக் கொள்கின்ற அளவுக்கு ஒன்றிய அளவில் இந்த மாதிரி தோட்டத்தை ஏற்படுத்தவில்லை என்றாலும், ஒரு நடமாடும் ஊர்தியை ஏற்படுத்தி அதன்மூலமாகவாவது பிரசாரம் செய்து, விவசாயிகள் தெரிந்துகொள்ள அரசு ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசே ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் மாதிரி தோட்டங்களை அமைப்பதற்கு இயலாது. ஆனால், பப்பாளி பயிரிட வேண்டுமென்று விரும்பக்கூடிய விவசாயிகள் முன்வருகிறார்கள் என்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் எல்லாம் இதனுடைய முக்கியத்துவத்தை நன்கு அறிந்திருக்கின்ற காரணத்தினால் ஆங்காங்குள்ள விவசாயிகளுக்கு பப்பாளித் தோட்டங்கள் அமைக்கவேண்டுமென்று அவர்களிடத்திலே ஆர்வத்தை இவர்கள் உண்டாக்குவார்கள் என்று சொன்னால், அவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகள் வழங்கப்படும், விதைகள் வழங்கப்படும், அதேபோன்று, இதனுடைய பயன்கள் குறித்து விளம்பரங்கள் அதிக அளவில் செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கி. பாலசுப்பிரமணியன்.

திரு. கி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பப்பாளிச் செடியை உற்பத்திச் செய்யவேண்டுமென்றால் அதற்கு தக்க சீதோஷ்ண நிலையும் தேவை. அதற்குக் குளிர்ந்த பிரதேசமாக இருந்தால்தான் அதைப் பயிர் செய்ய முடியும்.

[*1995 ஏப்ரல் 28*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பப்பாளிச் செடி வளர்வதற்கு குளிர்ந்த பிரதேசம் தேவையில்லை. எங்கள் ஊரிலேகூட வளரும். இருப்பதிலேயே ரஜ்ஜையான ஊர் எங்கள் ஊர்தான். அங்கேயே வளரும்.

திரு. கி. பாலசுப்பிரமணியன்: நான் சொல்ல வந்தது என்னவென்றால், அந்தமாதிரி குளிர்ந்த பிரதேசங்களில் வளரும்போது அந்தப் பழங்களுடைய டேஸ்ட் வேறு மாதிரியாக இருக்கும். சைஸூம் பெரிதாக இருக்கும். ஆகவேதான் அந்தப் பப்பாளியை குளிர்ந்த பிரதேசத்தில் உற்பத்திச் செய்வதற்கு அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பப்பாளி எல்லா மாவட்டங்களிலும் பயிரிடப்படக் கூடிய பயிர் வகையைச் சார்ந்தது. இன்றைக்கு உயர்ந்த ரகம், இனிப்பிலே, வண்ணத்திலே, அளவிலே பெரிது எனக் கருதித்தான் இன்றைக்கு வேளாண் பல்கலைக் கழகம் கோ.6 என்ற பப்பாளி ரகத்தை வெளியிட்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தக் கேள்வியை ரொம்ப விவரமான உறுப்பினர்கள்தான் கேட்க வேண்டும். திரு. இரா. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி: விவரமான உறுப்பினர் என்கிற முறையில் என்னைத் தேர்ந்தெடுத்திருப்பதற்கு மிக சந்தோஷம். அதாவது மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பப்பாளிப்பழம் சாப்பிடுவதானால் மருந்துக்கும் பயன்படுத்தலாம். உடம்புக்கும் நல்லது என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னார்கள். இந்தப் பப்பாளி மாதிரி மருந்துக்குக் பயன்படுத்துவதற்கு, வைட்டமீன் சத்துள்ள காய்கறிகள் அதிகமாக இருக்கிறது. முதலில் இதில் உள்ள தீமையை உணர வேண்டும். கர்ப்பிணிப் பெண்கள் இந்தப் பப்பாளிப் பழத்தைச் சாப்பிட்டால் அபார்ஷன் ஆகிறது. நாட்டிலே குழந்தைகள் உற்பத்தி குறைந்து விடுகிறது. குடும்பக்கட்டுப்பாடுத் திட்டத்திற்கு இந்தப் பப்பாளிப் பழத்தை உபயோகப்படுத்தலாமா? இல்லாவிட்டால் குழந்தைகள் எண்ணிக்கை குறைகிறது என்று சொல்லி அதற்கு உபயோகப்படுத்தலாமா? இதனால் பப்பாளிப் பழத்தைச் சாப்பிடுவதற்குப் பயப்படுவதால், இப்படிப்பட்ட ஆபத்து இருக்கிறது

1995 ஏப்ரல் 28]

என்று சொல்லி பப்பாளியை அதிகமாகப் பயிரிடுவதற்குத் தடை விதிப்பதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா? ஒன்று. (மணியடிக்கப்பட்டது) ஐயா, ஐயா.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னொரு விவரமான உறுப்பினர் இருக்கிறார். அவர் மிச்சத்தைக் கேட்பார். (குறுக்கீடு) சரி.

திரு. இரா. தாமரைக்கனி: அதாவது பப்பாளிப் பழம் நாட்டுக்குத் தேவையானது. நாட்டு மக்களுக்குத் தேவையானது. ஒன்று. அதை உற்பத்தி செய்வதாலே என்ன கேடு? இதைப் பெண்கள் உபயோகப் படுத்தலாமா? பெண்கள் உபயோகப்படுத்தக்கூடாத பப்பாளிப் பழத்தைக் கர்ப்பிணிப் பெண்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தாங்கள் மாண்புமிகு உறுப்பினரை அழைக்கின்ற பொழுதே அவருக்கு முன்னுரிமை தந்தீர்கள். விவரமான உறுப்பினர்கள் கேட்க வேண்டுமென்று சொன்னீர்கள். நானும் விவரத்தோடுதான் எதிர்பார்த்தேன். ஆனால் விவரமற்ற வினாதான் அங்கேயிருந்து வந்திருக்கிறது. ஒரு தவறான முன்னுதாரணத்தை, ஒரு பழக்கத்தை இன்றைக்கு நாட்டிலே புழக்கத்திலே விட்டிருக்கிறார்கள். ஏதோ பப்பாளிப் பழத்தைச் சாப்பிட்டுவிட்டால் கர்ப்பிணிப் பெண்களுக்குக் கருக்கலைப்பு ஏற்படுகிறது என்ற தவறான கருத்தைக் கிராமப் பகுதிகளிலே பரப்பியிருக்கிறார்கள். அது உண்மை அல்ல. இன்றைக்கு மருத்துவச் சான்றிதழ் பல்வேறு உண்மைகளைத் தெரிவித்திருக்கிறது. இன்னும் சொல்லப் போனால், உண்மையாக பப்பாளிப் பழம் அந்தக் கர்ப்பிணிப் பெண்களுக்கு வேண்டிய ஊட்டச்சத்தைத் தருகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. இன்றைக்குக் கூட ஒரு பெண் கர்ப்பிணியாக இருக்கிறாரா என்பதைப் பரிசோதிப்பதற்கு டாக்டரிடத்திலே போகிறார்கள். அவர்கள் கூட இன்ஜெக்ஷன் போடுகிறார்கள். அதிலே என்னவேன்று சொன்னால் அந்த ஹார்மோன் உற்பத்தி செய்யப்பட்டு அது உண்மையான கருவா என்று கண்டு பிடிப்பதற்குத்தான் இன்றைக்கு மருத்துவத் துறையிலே இதுபோன்ற முயற்சியிலே ஈடுபட்டிருக்கின்றார்கள். அதற்கு இந்தப் பப்பாளிப் பழத்தைச் சாப்பிட்டால் உண்மை தெரிந்து விடும். எனவே வேண்டிய புரதச் சத்து, வேண்டிய மினரல் இலவசமாக மிகக் குறைந்த அளவிலே கிடைக்கக்கூடிய பழம் பப்பாளிப் பழம் என்பதை இன்றைக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

[*1995 ஏப்ரல் 28*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி. கே. சின்னசாமி. விவரமான உறுப்பினர்தானே? அதனால்தான் இப்படிப்பட்ட உறுப்பினர்களாகப் பார்த்துக் கூப்பிடுகிறேன்.

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் கேட்டது உண்மைதான். கிராமத்திலே இருக்கின்ற தாய்மார்கள் இன்றுவரை இந்தப் பப்பாளிப் பழத்தை கர்ப்பிணியாக இருக்கின்ற தாய்மார்கள் சாப்பிடுவதற்கு அஞ்சுகிறார்கள். ஆனால் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் இங்கே அதனால் கேடு இல்லை. சாப்பிடலாம், அதனால் உடம்புக்கு நல்லது, வளர்கின்ற குழந்தைக்குக்கூட நல்லது என்று சொல்லுகிறார்கள். ஆகவே, மருத்துவத் துறையின் மூலமாக ஒரு அறிக்கையைப் பெற்று மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே இந்தச் சட்டமன்றத்திற்கு அறிவிப்பார்களேயானால் இந்தப் பப்பாளிப் பழத்தினுடைய பிரச்சினை நீங்கும். அது விவசாயிகளுக்கு இன்னும் இலாபம் கிடைக்கக்கூடியதாக இருக்கும். நிறைய விவசாய நிலங்களில் விளைகின்ற பப்பாளிப் பழம் அப்படியே வீணாகப் போகிறது. எங்கள் தோட்டத்திலே கூட இருக்கிறது. வேலைக்கு வருகிற பெண்களே நிறைய சாப்பிடுவது இல்லை. நான் கூட சாப்பிடுங்கள் என்று சொன்னேன். சாப்பிடப் பயப்படுகிறார்கள். ஆகவே, இதில் ஒரு தெளிவான முடிவை இந்த நாட்டிற்கு இந்த அவையின் மூலமாக இந்தப் பப்பாளிப் பழத்தைச் சாப்பிடுவதால் கர்ப்பிணிப் பெண்களுக்கு எந்த விதமான ஆபத்தும் இல்லை அல்லது உண்டு என்பதை விளக்கமாக அறிவிக்க வேண்டும். இன்னும் சொல்லப்போனால் இந்தப் பப்பாளிப் பழம் வேஸ்டாகப் போவதைத் தண்ணீரிலே கரைத்து ஆடு மாடுகளுக்குக் கூட விடுவார்கள். அதைக்கூடச் சில கிராமங்களிலே இப்படி மாடு கன்று ஈனுகின்ற தருவாயிலே இருக்கிற மாட்டுக்குக் கூட இதைக் கொடுப்பதற்குப் பயப்படுகிறார்கள். ஆகவே ஒரு தெளிவான விளக்கத்தை அவைத் தலைவரவர்கள் பெற்று அறிவிப்பாரா மாண்புமிகு அமைச்சரவர்களும் தெரிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்கபல் 10 -35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவரமான உறுப்பினர்களாக மூன்று பேரை துணைக் கேள்வி கேட்கவிட்டால், என்னை அந்த விவரத்தில் சேர்த்துக் கொண்டீர்களே?(சிரிப்பு) மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

1995 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய வினாவிலே அடிப்படைக் கேள்வியை நான் மறுக்கிறேன். உண்மை அதுவல்ல. இன்றைக்கு தாய்மார் ஒரு மருத்துவரிடத்திலே சென்று தங்களுடைய மகளோ அல்லது வேண்டியவர்களோ கர்ப்பிணிதானா என்பதை பரிசோதிப்பதற்கு ஓவரான் இன்ஜெக்ஷன் போடுகிறார்கள். அதற்குப் பிறகுதான் அது உறுதி செய்யப்படுகிறது. ஆனால், அந்த ஓவரானிலே என்ன சத்து இருக்கிறதோ, அதைக் கண்டுபிடிக்க இருக்கிறதோ, அதை பப்பாளி பண்ணும் என்பதை பல்வேறு மருத்துவச் சான்றிதழ்கள் இன்றைக்கு தெளிவுபடுத்துகின்றன. ஆனால், எனக்கு ஒரு வருத்தம் என்ன என்று சொன்னால், நான் மருத்துவம் படிக்கவில்லை, மருத்துவத் துறைக்கும் அமைச்சர் அல்ல. இப்படி இருக்கும் என்று சொன்னால், தீர்க்கமான பதிலை என்னால் சொல்லமுடியும். ஆனால், இன்றைக்குப் பல்கலைக் கழகத்திலேயுள்ள விஞ்ஞானிகள், மருத்துவ அறிஞர்கள் எல்லாம் தாக்கல் செய்த அறிக்கையிலே இது தவறான கருத்து என்று பல்வேறு காலகட்டங்களிலே மறுத்திருக்கிறார்கள். எனவே, குறைந்த விலையிலே மனிதனுக்குத் தேவையான அனைத்துச் சத்துக்களும் நிரம்பத் தரக்கூடிய பழம் பப்பாளிப் பழம். இது வேகமாக இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்திலே மட்டுமல்ல, உலக அளவிலே பரவி வருகிறது. எல்லோரும் விரும்பி உண்கிறார்கள். இன்றைக்கு மேலைநாடுகளுக்குக்கூட ஏற்றுமதி செய்யப்படுகிறது என்பதனை தங்கள் மூலமாக இந்த நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர், நான் மருத்துவர் இல்லாத காரணத்தினாலே இன்னும் கொஞ்சம் விளக்கம் சொல்ல முடியவில்லை என்றார். அதனால், மருத்துவர் சொல்லட்டுமே, டாக்டர் மணிமேகலை.

டாக்டர் சு. மணிமேகலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி. வேளாண்மைத் துறை அமைச்சர் கூறியதுபோல், பப்பாளியில் தீமைகள் எதுவும் கிடையாது. அதிகமான சத்துக்கள்தான் உள்ளன. அதேபோல காஸ்மட்டிக்ஸ்க்கும் இந்தப் பப்பாளியை உபயோகப்படுத்துகிறார்கள். சில சமயங்களில் பீரியட்ஸ் தள்ளி போயிருந்தால், அதாவது to diagnose whether it is pregnancy or not என்பதற்காக E.P. Forte போன்ற மாத்திரைகள், ஈஸ்டிரஜன் புராடெக்ஸ் உள்ள மாத்திரைகளைக் கொடுக்கிறார்கள். அதுமாதிரி காலங்களில் பப்பாளி கொடுத்தால் பிரக்னென்ஸி இல்லாமல்

தூரம் தள்ளிப் போகிறவர்களுக்கு, மென்சஸ் தள்ளிப் போகிறவர்களுக்கு, பீரியட்ஸ் வரும். Withdrawal bleeding இருக்கும். அதைப் பப்பாளி மூலம் தெரிந்துகொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் சொன்னதுபோல், பப்பாளி சாப்பிடுவதால் அபார்ஷன் ஆவது கிடையாது. மாதமாக இருக்கிறோம், பிரக்னென்ட்டாக இருக்கிறோம் என்று நினைப்பவர்கள் இந்தப் பப்பாளி சாப்பிடுவதால் withdrawal bleeding ஏற்படும். இதைத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வலியுறுத்திச் சொல்கிறார்கள். ஆகவே, அதில் ஈஸ்டிரஜன் புராடெக்ஸ் அதிகமாக இருக்கிறது. மற்ற சத்துக்களும் அதிகமாக உள்ளன. ஈஸ்டிரஜன் சத்தும் அதிகமாக இருப்பதால் We will have withdrawal bleeding. So we will know whether aminora is due to pregnancy or not. என்பதை நாம் இதன்மூலம் தெரிந்துகொள்ளலாம். வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் விடையா சொன்னீர்கள்? விடை சொல்வதற்கு அமைச்சர் ஒருவர் இருக்கிறாரே, அவரிடம் தனிக் கேள்வி போட்டு வாங்கி இருக்கலாமே?

வினா எண் 490, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

490—

ஈரோட்டில் மஞ்சள் வணிக வளாகம் அமைத்தல்

*43429—**திருமதி கே. மரியம் உல் ஆசியா:**

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம், ஈரோட்டில் மஞ்சள் வணிக வளாகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஈரோடு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு கட்டிடங்கள் கட்ட போதிய நிலம் வாங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. போதிய நிலம் கிடைத்துவிட்டால் பெரியார் விற்பனைக் குழு நிதி நிலை அடிப்படையில் எதிர்வரும் ஆண்டுகளில் மஞ்சளுக்கென வளாகம் அமைக்க ஆவன செய்யப்படும்.